RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2033

# சங்க காலத்தில் நடைப்பெற்ற தமிழர் திருமண முறைகள்

த. லதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரி மலை-635853, தமிழ்நாடு, இந்தியா.

# Tamil Marriage Practices during the Sangam Period

D. Latha [a, *]

[a] Department of Tamil, Don Bosco College, Yelagiri Hills-635853, Tamil Nadu, India

* Corresponding Author: latha@dbcyelagiri.edu.in

Received: 27-06-2022
Revised: 30-09-2022
Accepted: 12-10-2022
Published: 05-11-2022

## ABSTRACT

Tolkappiyar says that the marriage system arose only after the appearance of lies and errors. Tamil and Tamil language are ancient. The Sangam age was a golden age for the Tamil race. Marriage is a relationship. Marriage takes place for reasons such as family, economy, progeny, etc. During the Sangam age, the married way of life is divided into two types. In the headman's house, a request is made to get the girl married and the girl's family chooses the bridegroom and gives her away in marriage to the man with the relatives around her. Another way that the woman and the man to go away willingly. In this case, traditional marriage is the willingness of both families to get married happily along with the people of the village and their neighbours. Madalmanam is the one in which the man climbs the palm horse to marry the woman of his choice. The marriage that takes place after that is called a Madalmanam. The marriage is done in the house of the man by giving gold, goods, and money. Monogamy consists of only two people. But marrying one or more women is polygamy. The vel madal, which describes the heroic spirit of the Tamils, is about fighting and marrying the woman of his choice. In this paper, let us discuss in detail about the marriages that took place during the Sangam period.

**Keywords:** Madalmanam, Tolkappiyar, Relationship, Tamil Marriage

## முன்னுரை

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமண முறையில் பழங்காலத்தில் வாழ்ந்து வந்தனர். சங்க காலத்தில் திருமணம் என்ற ஒன்று இல்லை. பொய்யும் குற்றமும் தோன்றிய பின்னர் தான் திருமண முறை தோன்றியது என்பர் தொல்காப்பியர். திருமணம் என்பது மனமொத்த ஆண் பெண் இணைந்து நடத்தப்படும் வாழ்க்கை ஒப்பந்தம். இரு குடும்பங்களின் இணைப்பாக வாழ்வின் அடிப்படை. இது ஆண் பெண் இருவரும் கட்டுப்பட்டு தனது மூதாதையார்களின் வழித்தோன்றலாகிய ஒரு புதிய சந்ததியை உருவாக்குவதற்கு ஒரு புதிய இணைப்பு ஆகும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து அன்போடு ஒழுகி அறச்செயல்கள் செய்து மகிழ்வோடு வாழ்வதால் தான் இல்லற வாழ்க்கை பண்போடும் பயனுள்ளதாகவும் அமையும் என்கிறார் திருவள்ளுவர். பழங்காலத்தில் புரோகிதர் மந்திரங்களைக் கூறி திருமணம் செய்யும் முறை இல்லை. ஆனால் இக்காலத்தில் அனைத்து ஊரும் நமதே அனைத்து நாட்டினரும் நமது உறவினரே என்று கூறி

வாழ்ந்தாலும் நாடு மற்றும் இனம் முதலியவற்றின் அடிப்படையில் திருமண முறைகள் மாறுகிறது. நமது அன்பின் ஐந்திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் இந்த நிலத்தில் உள்ள மக்களின் திருமணமுறைகள் பலவகைப்படும்.

## திருமண முறைகள்

களவு வாழ்க்கை மேற்கொண்டு திருமண வாழ்வில் புகுந்த தலைவன், தலைவியின் மணம் இரண்டு வகையில் நடந்தது என்பர் தொல்காப்பியர்.

## பெண் கேட்டு மணத்தல்

தலைவனின் பெற்றோர் தலைவியின் பெற்றோரிடம் பெண் கேட்டு, தலைவியின் பெற்றோர் மனமுவந்து தம் பெண்ணை அவள் காதலனாகியத் தலைவனுக்குக் கொடுக்கவே தலைவன் மணந்து கொண்டான் என்பதை,

“கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்

கொளக்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே||

தொல்காப்பிய நூற்பா இயம்புவதனைக் காணலாம் (Aranamuruval, 2003).

உடன்போக்கு மேற்கொண்டு மணத்தல்

களவு வாழ்க்கை மேற்கொண்ட தலைவன் தலைவியின் காதலைப் பெற்றோர் ஒப்புக்கொள்ளாவிடத்துப் பெற்றோரின் ஒப்புதலின்றியும் திருமணம் நிகழ்ந்துள்ளது. இதனை,

“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்து உடன்போகிய காலையான”

இந்நூற்பா வழி அறியமுடிகிறது (Aranamuruval, 2003).

## மரபுவழித் திருமணம்

இதில் பெண்ணின் பெற்றோர் மணமகனையும் ஆணின் பெற்றோர் மணமகளையும் தேர்ந்தெடுத்துத் திருமணம் முடிப்பது மரபு வழித்திருமணம் ஆகும்.

“நேரிறை முன்கை பற்றி நுமர்தர

நாடறி நன்மணம் அயர்கம்”

என்னும் பாடல் சுற்றத்தார் பலரும் அறிய திருமணம் என்னும் மண இணைவை நிகழ்த்துதலையே நன்மணம் என்கிறது (Nachinarkiniyar, 1985).

பாரிவள்ளல் போரில் இறந்துவிட அவரின் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேந்தர்களான விச்சிக்கோவிடமும், இளங்கோ வேளிடமும் கபிலர் வேண்டுகிறார். பாரி இறந்து விட்டதால் அவரது பெண்களைத் தனது மகள்களாக நினைத்து மகட்கொடை புரிதற்குத் தகுதியுடையேன் என்கிறார். “பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் களவின் வழித் திருமணம் போற்றப்பட்டு ஆதரிக்கப்பட்டது போலவே தமர் கொடுப்பக் கொள்ளும் மரபும் பழைமையுடையதாய் போற்றப்பட்டது” என்னும் சசிவல்லி என்பவர் கருத்தும் நோக்கத்தக்கதாகும்.

## மடல் மணம்

தலைவன் தான் விரும்பிய தலைவியை மணம் முடிக்க முடியாத நிலையில் அல்லது காதல் கைக் கூடாத நிலையில் பனைமரத்தின் கருக்கினால் குதிரை செய்து அதன் மீது அமர்ந்து தலைவியின் உருவத்தை வரைந்து கையில் பிடித்துக் கொண்டு பலரும் இருக்கின்ற ஊரின் நடுவில் உள்ள நாற்சந்தியில் ஆவாரம் பூ, பூளைப் பூ, எருக்கம் பூ ஆகியவற்றால் மாலை தொடுத்து அணிந்து நிற்பான். இதனைக் கண்ணுற்ற பெரியோர் பனங்கருக்கினால் கால்களில் உண்டான காயங்களால் இரத்தம் வழிவதைக் கண்டு இரக்கமுற்று பெண்ணின் பெற்றோரிடம் சென்று பேசித் திருமணத்தை நடத்தி வைப்பர். இதனை,

"மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை

அணிப்பூளை, ஆவரை எருக்கொடு பிணித்துயாத்து

துன்பத்தில் துணையாய மடல் இனி இவள்பெற"

என்னும் கலித்தொகைப் பாடலால் அறியமுடிகிறது (Kabilar, 1984).

## பரிச மணம்

தலைவியின் பெற்றோர், தன் மகளைப் பெண் கேட்டு வருபவரிடம் பொன், நிலம் போன்றவற்றைப் பரிசுத் தொகையாகப் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து வைத்தனர் என்பதை,

"உறுமெனக் கொள்குநர் அல்லர்

நறுநுதல் அரிவை பாசிழை விலையே"

என்னும் அகநானூற்றுப் பாடல் வெளிப்படுத்துகின்றது (Venkatasami nattar, 1954). சங்க காலத்தில் பால்ய விவாகம் நடைபெற்றதைக் காண முடிகிறது. திருமணத்தை உறுதி செய்த பிறகு மணமகனைப் பிடிக்காவிட்டால் பெற்றோர் பெண் தருவதற்கு மறுத்து பரிசத்தொகையையும் அவர்களிடம் கொடுத்து விடுவார்கள்.

## போர் மணம்

சங்க காலத்தில் ஒருவன் தான் விரும்பும் பெண்ணை மணம் முடிப்பது கடினம் என்னும் சூழல் ஏற்படும் நிலையில் போரில் வெற்றி பெற்று திருமணம் புரிந்து கொண்டான் என்பதும் தெரியவருகிறது.

அரசனொருவன் மாற்றரசன் மகளைக் கண்டு காதல் கொள்கிறான். முறையாக அவ்வரசனிடம் சென்று பெண் கேட்க அவன் கொடுக்க மறுக்கிறான். இந்நிலையில்,

"சுணங்கு அணி வனமுலை அவளொடு நாளை

மணம்புகு வைகல் ஆகுதல் உன்றோ-

நீள் இலை எஃகம் மறுத்த உடம்பொடு

வாரா உலகம் புகுதல் ஒன்று"

இப்பாடல் அதனை எடுத்துரைக்கிறது. இதில் பெண் கேட்டும் கொடுக்க மறுத்த மன்னனைப் போர்தொடுத்து அவனை வென்று அவன் மகளை மணம் முடிப்பேன். தோல்வியடைந்தால் வேல் பாய்ந்த உடலொடு இறந்துபடுவேன் என்று கூறுவதனைக் காணமுடிகிறது. சங்க காலத்தில் தான் விரும்பிய பெண்ணை மணம் முடிப்பதற்காகப் போர் நிகழ்ந்ததை அறிய முடிகிறது (Dhatchanamoorthi, 2005).

## பலதார மணம்

தலைவன் தன்னுடைய மனைவிக்குப் பிள்ளைப்பேறு இல்லாத வேளையில் தன் முதல் மனைவியின் இசைவுடன் இரண்டாவது திருமணம் செய்து இல்லத்திற்கு அழைத்து வருவான். முதல் மனைவியும் அவளையும் கணவனையும் வரவேற்று முழுமனதுடன் உபசரிப்பாள் என்பதை,

"பினமுறை ஆக்கிய பெரும்பொருள்வதுவைத்

தொல்முறை அனைவி எதிர்ப்பா டாயினும்" (Kabilar, 1984)

இவ்வாறு தொல்காப்பியமும்,

"தண்மழை தழீஇய மாமலை நாட

நன்மனை யருங்கடி யயர"

என்று ஐங்குறுநூற்றுப் பாடலும் விளக்குகின்றன (Somasundaranaar, 1961).

தனக்குக் குழந்தையில்லாதத் துயரினை அவள் தீர்த்து வைப்பாள் என்று கணவனின் மறுமணத்திற்குப் பெண்கள் சம்மதித்தனர் என்பதை உணரமுடிகிறது. குழந்தையின்மைக்குப் பெண்ணே காரணம் என்பது அப்போதும் நினைக்கப்பட்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுக்கு முன்னர் வரையும் அவ்வாறே நம்பப்பட்டும் வந்தது, என்பதும் நாம் சிந்திக்கத்தக்கதாகும். இவ்வாறு பல நிலைகளில் திருமணங்கள் நடைபெற்றதைச் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு திருமணங்கள் தோன்றியதற்கு முன்னர் தலைவன் தலைவி தாமாகவே உள்ளத்தால் இணைந்து உறவால் கணவன் மனைவியாக வாழ்ந்துள்ளனர். ஆனால் அவ்வுறவிலே பொய் தோன்றிய பின்னர் திருமண முறை தோன்றியுள்ளது. காலப்போக்கில் நெறிதவறும் போக்கு ஏற்பட்டதால் பலர் முன்னிலையில் பெண்ணைப் பெற்றோர் உடன்பட்டுக் கொடுத்தல் வேண்டும் என்ற முறை உருவாக்கப்பட்டுள்ளது. இதனை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் நூற்பா வழித் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது (Aranamuruval, 2003).

## முடிவுரை

இன்றைய திருமணமுறையென்பது சங்ககால தமிழரின் திருமணமுறைக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. சங்க கால திருமண முறைகள் மிக எளிமையாக இருந்தது. சடங்குகள் மற்றும் புரோகிதர்கள் இல்லை. சங்ககாலத்தில் திருமணமுறைப் பற்றிய செய்திகள் அவ்வளவாகக் கிடைக்கவில்லை. அகநானூற்றில் இரண்டு பாடலும், புறநனூற்றில் இரன்டு பாடலும் திருமண முறை ற்றிக் கூறுகிறது. ஏனென்றால் இருவர் உள்ளம் மட்டுமே இணைந்து நடைபெறும் திருமணமுறை தான் இருந்தது. 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற முறையில் தான் அவர்கள் இணைந்திருக்கிறார்கள். சங்ககால மணமுறைகளான பரிச மணம், மடல் மணம், போர் மணம், மரபு மணம் என்ற வகையில் திருமண முறைகள் இருந்தனவே தவிர இக்காலத்தில் நடைபெறும் புரோகிதர் மந்திரம் ஓதல், தீ வலம் வருதல், அருந்ததி பார்த்தல் போன்ற முடப்பழக்கழக்க திருமணமுறைகளுக்கு சங்ககாலத்தில் இடமில்லை. சங்க காலத்தில் மந்திரமில்லை ஆனால் மனங்கள் ஒன்றிணைந்து திருமணமுறை இருந்தது. தற்காலத்தில் மந்திரங்கள் ஓதப்படுகிறது. சங்க காலத்தில் பல திருமணமுறைகளைப் பார்த்தோம்.

## References

Aranamuruval, N. (2003) Tholkappiyam, Tamil Maan Pathippagam, Chennai, India.

Dhatchanamoorthi, A. (1976) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Dhatchanamoorthi, A. (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Kabilar, (1984) Kalithogai, Tamil University, Madurai, India.

Nachinarkiniyar, (1985) Paathupattu, U. V. SA., Library, Chennai, India.

Somasundaranaar, P.V. (1961) Ainkurunuru, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Venkatasami nattar, N.M. (1954) Agananooru, Ramaiya pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License